**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**STC.NO- 264/2024**

**PW1 - Recall**

| | | | |
|---|---|---|---|
| Name | ராதா | Age: | 42 |
| Husband name | சசிக்குமார் | Calling: | டெயிலர் |
| Village | கந்தர்வக்கோட்டை | Taluk | கந்தர்வக்கோட்டை |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.09.2025
( எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**கு.வி.மு.ச. பிரிவு 311—ன் கீழ் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.ப.மனு எண். 376/2025 இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1) எந்த சர்வே எண்ணில் கண்ட சொத்தை எதிரிக்கு கிரையம் கொடுத்ததாக எனது புகார் மனு அறிவிப்பு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் நான் வழக்கறிஞரிடம் சொன்னேன், ஆனால் மேற்படி ஆவணங்களில் சர்வே எண் காட்டப்படவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் எவ்வளவு தொகைக்கு எதிரிக்கு கிரையம் கொடுத்தேன் என சொல்லவில்லை என்றால் சரிதான், லாப தொகைக்கும் சேர்த்து எதிரி காசோலை கொடுத்தார். நான் பங்கு தாரராக இருந்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான். எதிரி வின்லேண்ட் ப்ரோமோட்டர்ஸ் என்ற நிறுவனம் நடத்தி வந்தார் என்றால் சரிதான். அதில் நிறைய பங்குதாரர்கள் இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். நானும் அதில் பங்குதாரராக இருந்தேன் என்றால் சரிதான், லாபம் சேர்த்து தருவதாக சொன்னதால் நான் தொகையை கேட்காமல் இருந்தேன். மேற்படி நிறுவனத்தில் எதிரி தான் நிர்வாகத்தில் இருந்தார் என்றால் சரிதான். நான் நிறுவனத்திற்கான பங்கை தான் கேட்கிறேன் என்றால் இல்லை, எனக்கு சேர வேண்டிய நிலத்திற்குரிய பணம் மற்றும் அதற்குரிய லாப பணத்தை தான் கேட்கிறேன்.

2) நான் லாபம் என்று கூறுவது பங்குத்தொகை என்றால் இல்லை. நான் எதிரி நடத்திய நிறுவனத்தில் எனது கிரைய தொகையை முதலீடு செய்த விபரத்தை எனது வழக்கறிஞரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். நிறுவனத்தை பற்றிய மற்ற விபரங்களையும் சொன்னேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் மேற்படி நிறுவனத்தை நான் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சேர்க்கவில்லை. நிறுவனத்தில் யார் இருந்தார் என்று தெரியவில்லை, எதிரி தான் நிர்வாக இயக்குநராக இருப்பதாக சொன்னார். நான் நிறுவனத்தை தரப்பினராக சேர்க்காமல் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் சட்டப்படி வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நான் மேற்படி நிறுவனத்தில் கொடுத்து அசல் தொகை எவ்வளவு என்றால் ரூ.14,00,000/— ஆகும். மேற்படி தொகை கொடுத்த விபரத்தை எனது வழக்கறிஞரிடம் சொன்னனா என்றால் சொன்னேன். புகார் மனு, நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி ரூ.14,00,000/— தொகை குறித்து புகார் மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்படாதது குறித்து எனது வழக்கறிஞரிடம் கேட்டேனா என்றால் லாபதொகையுடன் சேர்த்து ரூ.20,00,000/— என்று சொல்லியுள்ளேன்.

3) நான் எதிரிக்கு விற்பனை செய்த சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 28 செண்ட் விஸ்தீரணம் உள்ள சொத்து மற்றும் எங்கள் பூர்வீக சொத்தில் 75 செண்ட் விஸ்தீரணம் உள்ள சொத்தினை கொடுத்துள்ளோம். நான் மட்டும் எதிரிக்கு விற்பனை செய்ததாக சொல்லும் சொத்தின் விஸ்தீரணம் 103 செண்ட் என்றால் 28 செண்ட் சொத்தினை நான் விற்றேன், 75 செண்ட் விஸ்தீரணம் உள்ள பூர்வீக சொத்தில் எனக்கு இருந்த பங்கினை விற்பனை செய்தேன். மேற்படி நிறுவனம் காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் தொகை மேற்படி 103 செண்ட் நிலத்திற்கு

என்றால் எனக்கு சேரவேண்டிய பங்கிற்காக காசோலை கொடுக்கப்பட்டது. எனக்கு நிறுவனம் காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் தொகை எனக்கு சொந்தமான 28 செண்ட் நிலத்திற்கும், 75 செண்ட் நிலத்தில் எனக்கு உள்ள பங்கிற்கும் சேர்த்து, லாப தொகைக்கும் கொடுக்கப்பட்டது.

4) ரூ.14,00,000/—ல் 28 செண்ட்டிற்கு எவ்வளவு தொகை, 75 செண்ட் நிலத்தில் எனக்குரிய பங்கிற்கு எவ்வளவு தொகை என்றால் அக்ரிமெண்ட் வீட்டில் உள்ளது, பார்த்து தான் சொல்லமுடியும். அவ்வாறு எதிரி அக்ரிமெண்ட் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றாலும் இனிமேல் வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்ய உள்ளோம் என்றாலும் சரியல்ல. அவ்வாறு அக்ரிமெண்ட் எதுவும் இருந்திருந்தால் புகார் மனுவுடன் தாக்கல் செய்திருப்பேன் என்றால சரியல்ல. அவ்வாறு ஒப்பந்தம் இருப்பதாக எனது புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி 28 செண்டில் ஒரு செண்ட் என்ன விலைக்கு பேசினோம் என்றால் பத்து வருடத்திற்கு முன்பு நடந்ததால் பார்த்துவிட்டு சொல்கிறேன். மேற்படி 75 செண்டில் ஒரு செண்ட் என்ன விலைக்கு பேசினோம் என்றால் அதற்கு நான் பேசவில்லை, எனது அண்ணன்கள் தான் பேசினார்கள், எனக்குரிய பாகத்தை தருவதாக சொன்னார்கள்.

5) எனது அண்ணன் எனக்குரிய பாகத்தை கொடுத்தாரா என்றால் எனக்கும் எனது அண்ணனுக்கும் பேச்சுவார்த்தை இல்லை, எதிரி தான் பேச்சுவார்த்தை நடத்தி கொடுப்பதாக சொன்னார். நான் எனக்குரிய பாகத்திற்கான பணத்தை பெற்றேனா என்றால் இல்லை. அந்த தொகை எவ்வளவு என்று எனக்கு தெரியாது என்றால் மொத்தத் தொகை ரூ.14,00,000/— தான். மொத்த தொகையும் தற்போது நான் எதிரியிடம் கேட்கிறேன் என்றால் சரிதான், அவருக்கு கிரையம் செய்து கொடுத்ததால், அவரிடம் கேட்கிறேன். நான் எதிரிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தில் கிரைய தொகை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அரசாங்க வழிகாட்டு மதிப்பின் படி குறிப்பிடப்பட்டுள்ளது, என்னிடம் பேசிய தொகை காட்டப்படவில்லை. மேற்படி கிரைய பத்திரம் என்னிடம் உள்ளது என்றால் சரிதான்.

6) பூர்வீக சொத்தினை யார் யார் கையொப்பம் செய்து, விற்பனை செய்தோம் என்றால் எனது அண்ணன் தான் கையொப்பம் செய்தார், கூடுதலாக ரூ.50/— பத்திரத்தில் 5 சகோதரிகளிடமும் கையொப்பம் வாங்கி கொண்டார்கள். எனது அண்ணன் பரமசிவம் விற்பனை செய்தவற்காக, எதிரிக்கு ஆதரவாக நாங்கள் எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் நகல் வைத்துள்ளோமா என்றால் இல்லை. நான் எழுதி கொடுத்ததாக சொல்லும் ஆவணத்தில் நகலை காண்பித்தால், என்னால் அடையாளம் காட்ட முடியும் என்றால் முடியும். 5 சகோதரிகளிடமும் தனித்தனியாக எழுதி வாங்கியுள்ளார்கள்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**